" විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු "
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000
SLSI ISO 9001 SYSTEM CERTIFIED
SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019
ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No.
දිනය / திகதி / Date 2019/05/09

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 32/91(IV), 04/2018(I), 08/2019 மற்றும் அரச நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் இலக்கம் 01/2019 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/01/2019 மற்றும் 2019.05.03 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 32/91 (IV), 2019-03-13 | உள்ளூராட்சித்தாபனங்களிற்கு தேர்தல்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட அரசியல் உரிமைகள் உடைய அரச அலுவலர்கள் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2018(I), 2019-03-14 | இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை அலுவலர்களுக்கு பட்டயத் தொழில்சார் கொடுப்பனவை வழங்குதல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 08/2019, 2019-03-28 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவினை திருத்துதல் |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 01/2019, 2019-03-19 | கறுப்புப் பட்டியலிடப்பட்ட அலுவலர்களை மீண்டும் சேவையில் அமர்த்துதல் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2018(I)

எனது இலக்கம் : *MPA/ASD/03/UNION 10*
பொது நிருவாக மற்றும் அனர்த்த
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.03.14

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கு பட்டயதொழில்சார் கொடுப்பனவினை வழங்குதல்</u>**

இலங்கை பொறியியலாளர் சேவையின் பட்டயப் பொறியியலாளர்களுக்கான, *2018.02.01* ஆந் திகதி முதல் மாதாந்த கொடுப்பனவாக செலுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை *04/2018* இன் பால் தங்களது கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

*02.* இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் பட்டய கட்டிடக் கலைஞர்களுக்காக, அச் சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தும் திகதி முதல், அதன் ஏற்பாடுகளின் பிரகாரம், பட்டயக் கொடுப்பனவினை செலுத்துவதற்காக *2018.06.05* ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, அமைச்சரவைச் செயலாளரின் இலக்கம் *අමප/18/0857/734/013* மற்றும் *2018.06.13* ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது.

*03.* அதற்கிணங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு